1973 நவம்பர் 22]

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : *தலைவர் அவர்களே, இப்படி மருத்துவ மனைக்கு ஒதுக்கப்படும் மருந்துகள் வெளியே கடத்தப் படுவதாக அரசுக்குப் புகார் வந்ததா? அப்படியானால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?*

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : *தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, மருந்துகள் கடத்தப்படுவதைப்பற்றியதல்ல. மருத்துவ மனைக்குத் தேவையான மருந்துகள் 1973 ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இல்லாததால், அங்கே அவர்களுக்குச் சரியான சப்ளை இல்லாததால் மருந்து கிடைக்கவில்லை என்று கேட்கப்பட்டிருக் கிறது. எந்தெந்த மருந்துகள் அவர்களிடத்தில் அந்த நேரத்தில் தேவையான, அவசியமான அறுவை சிகிச்சை போன்ற பணிகளுக் காக இருந்தன என்பதற்கான புள்ளி விவரம் கிடைத்திருக்கிறது. பெரும்பாலான மருந்துகள் அவர்களிடத்தில் போதுமான அள வுக்கு இருந்தன. எண்ணிக்கை அளவில், ஓராண்டுத் தேவையின் அளவில் சற்று குறைவாக இருந்தன. அவை குறைவாக இருந் தனவே தவிர, அடியோடு இல்லை என்ற நிலைமை இல்லை. அவை களுங்கூட, ஜூன் மாதம் 17-20 தேதி அளவில் அவர்களுக்கு மறுபடியும் கிடைத்திருக்கின்றன. ஆகவே, மருந்துகள் பற்றாக் குறை ஏற்பட்டு நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்குவதில் குறைவு ஏற்படக் காரணம் இல்லை என்பதுதான் இதிலே விளக்கப் பட்டிருக்கிறது. மருந்துகள் கடத்தப்படுவது பற்றி குறிப்பாக எந்த இடத்திலாவது நடைபெறுவதாக மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் தெரிவித்தால் உடனடியாக—தேவையானால் விஜி லன்ஸ் மூலமாகக் கூட—நடவடிக்கை எடுக்க அரசு முன்வரும்.*

Certificate course in Nursing

* 306 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state whether the General Body of the Nurses Association, Chingleput has passed a resolution during January 1973 requesting the Government to convert the 3 year certificate course in nursing into a diploma course and to appoint a Tutor (Grade I) at every school of Nursing?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. நா. வீராசாமி : *தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலிருக்கக்கூடிய நர்சுகள் மேல் பட்டப்படிப்பு படிக்க வேண்டுமானால் அவர்களுக்குத் தமிழ் நாட்டில் வசதி இல்லை,*

எம்.எஸ்ஸி. (நர்சிங்) போன்ற படிப்பு படிக்க டில்லிக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒரு போஸ்ட்-க்ராஜுவேட் கோர்ஸினை நம்முடைய கல்லூரிகளிலேயே ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. ஆனால், அதுபற்றி ஆலோசிக்கப் படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, செவிலியர்களுக்கு சமுதாயத்தில் கௌரவமும் மரியாதையும் ஏற்படுகிற வகையில் இன்னும் விரிவாக டிகிரி கோர்ஸ் அல்லது 'அட் லீஸ்ட்' டிப்ளமா கோர்ஸாவது சென்னையில் துவக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதற்கு முற்பட்ட துணைக் கேள்வியும் இதுபற்றியதுதான். அது ஆலோசிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

சென்னை துறைமுக விரிவாக்க வேலைகள்

***307 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சென்னை துறைமுகத்தை விரிவுபடுத்தும் வேலை எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சென்னைத் துறைமுகத்தில் வெளிப்புறத் துறைமுகம், உலோகக் கனித்துறை மீன்பிடித் துறை கட்டுமான வேலைகளை சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம் செய்துவருகிறது.

( ) சென்னைத் துறைமுகத்தில் எண்ணெய், கனிப் போக்கு வரத்துக்கான வசதிகளுக்கான வெளிப்புறத் துறைமுகக் கட்டுமான வேலை 1966-ஆம் ஆண்டில் சென்னைத் துறைமுகத்தில் தொடங்கப் பட்டது. இது 1973 பெப்ரவரி 4-ல் செயல்படத் தொடங்கி வைக்கப் பட்டது. இதற்கு, தமிழ்க் கவிஞரும் தேசாபிமானியுமான திரு. சுப்பிரமணிய பாரதியாரின் பெயரில் " பாரதித்துறை " என்று பெயரிடப்பட்டது.